SIVANMANAI

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

## பதிகம்: திருக்கோத்தும்பி

THIRUVASAGAM GROUP

Scan this QR code using the WhatsApp Camera to join this group

**சிவன்மனை**

**சென்னை-600091**

www.fhyzics.net/sivanmanai

SIVANMANAI

# திருக்கோத்தும்பி

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

பூஏறு கோனும் புரந்தரனும் பொற்புஅமைந்த
நாஏறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாஏறு சோதியும் வானவருந் தாம்அறியாச்
சேஏறு சேவடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

நான்ஆர் என்உள்ளம்ஆர் ஞானங்கள்ஆர் என்னை யார்அறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊன்ஆர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேன்ஆர் கமலமே சென்றுஊதாய் கோத்தும்பீ.

தினைத்தனை உள்ளதுஆர் பூவினில் தேன்உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்துஎலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

கண்ணப்பன் ஒப்பதுஓர் அன்புஇன்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வாஎன்ற வான் கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றுஇங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்துஏதும் இல்லாதுஎன் பற்றுஅறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்விஎன்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்புஎன்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

சட்டோ நினைக்க மனத்து அமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருஅறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

ஒன்றாய் முளைத்து எழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்து என்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்அனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பு என்ற இவைஇரண்டின் மயக்குஅறுத்த
கருணைக் கடலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்துஅறியா வண்ணம்எல்லாம்
தாயுற்று வந்துஎன்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

வல்நெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கல்நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னம் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்அம் கழலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

நாயேனைத் தன்அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனைச்
சீரேதும் இல்லாதுஎன் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

நான்தனக்கு அன்புஇன்மை நானும்தானும் அறிவோம்
தான்என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாம்அறிவார்

SIVANMANAI

ஆன கருணையும் அங்குற்றே தான்அவனே
கோன்என்னைக் கூடக் குளிர்ந்துஊதாய் கோத்தும்பீ.

கருவாய் உலகினுக்கு அப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

நானும்என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்
தானும்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேன்உந்து சேவடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

உள்ளப் படாத திருஉருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான் எம்பிரான் என்னை வேறேஆட்
கொள்அப் பிரானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

பொய்ஆய செல்வத்தே புக்குஅழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே அம்பலவா என்று அவன்தன்
செய்ஆர் மலர்அடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

தோலும் துகிலுங் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துஊதாய் கோத்தும்பீ.

கள்வன் கடியன் கலதிஇவன் என்னாதே
வள்ளல் வரவர வந்து ஒழிந்தான் என்மனத்தே
உள்ளத்து உறுதுயர் ஒன்றுஒழியா வண்ணம்எல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

SIVANMANAI

பூமேல் அயனோடு மாலும் புகல் அரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசுஇட்டு நன்றாய் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி